**செய்தி வெளியீடு எண் : 1449** **நாள் : 23.08.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், கனடாவின் ஹாலிஃபாக்ஸ் நகரில் நடைபெறும் 65-ஆவது காமன்வெல்த் மக்களவை மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு வடஅமெரிக்காவுக்கு சென்றுள்ளார்கள்.

இப்பயணத்தின் ஒரு பகுதியாக கலிபோர்னியா மாநிலம், சேக்ரமெண்டோ மற்றும் சான் பிரான்சிஸ்கோ வளைகுடா பகுதி தமிழ் மன்றம் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி 21.08.2022 அன்று சிலிகான் ஆந்திரா பல்கலைக்கழக வளாகத்தில் இந்திய தூதர் முனைவர் டி. வி. நாகேந்திரபிரசாத் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் நிகழ்ச்சியில் பேசியதாவது "தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது அனைவருக்குமான அரசு, சாமானியர்களுக்கு உண்டான அரசு. சாமானிய மக்களின் பிரச்னைகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தனி கவனம் செலுத்தி வருகிறார்.

வளைகுடா பகுதியில் பணிபுரியும் பலர் மென்பொருள் துறையில் தான் உள்ளனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ் எழுத்துரு உருவாக்க பேராசிரியர் மு. அனந்தகிருஷ்ணன் தலைமையில் குழுவொன்று துவக்கி செவ்வனே செய்தார். அன்றைய கால கட்டத்தில் மென்பொருள் துறை, மென்பொருள் பூங்கா (TIDEL Park) உருவானது என்பது உங்களுக்கு நன்றாக தெரியும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் துவங்க பெற்ற "நான் முதல்வன்" திட்டம் மாணவர்களுக்கு எதிர்கால வழிகாட்டியாக விளங்குகிறது. இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் உதவ வேண்டும்.

தமிழக சட்டமன்ற செயல்பாடுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு தொலைக்காட்சி வழியாக மக்களை சென்றடைகிறது. நூற்றாண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் இதுவரை நடந்த நிகழ்வுகள் அனைத்தும் வெகு விரைவில் சமூக வலைத்தளங்களில் கிடைக்கப்பெறும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டமன்ற செயலாளர் திரு. கி. சீனிவாசன், தமிழ் மன்ற தலைவர் திரு. குமார் நல்லுசாமி மற்றும் தமிழ் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in